செய்தி வெளியீடு எண்.517 நாள் – 13.12.2006

# செய்தி வெளியீடு

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 29.11.2006 அன்று டெல்லியில் மத்திய அரசு மனித வளத் துறை அமைச்சர் மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்களைச் சந்தித்து, செம்மொழி தமிழுக்கென தனியே ஒரு நிறுவனத்தை சென்னையில் உருவாக்கிட மத்திய அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க 11ஆம் ஐந்தாண்டுத் திட்டக் கருத்துருக்களில் சென்னையில் செம்மொழி தமிழ் நிறுவனத்தை ஏற்படுத்திட தேவையான திட்டம் தயாரிக்கப்பட்டு இணைக்கப்படும் என்று மத்திய அமைச்சர் மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்கள் முதல் அமைச்சர் கலைஞர் அவர்களுக்கு கடிதம் அனுப்பினார்.

செம்மொழி தமிழுக்கென சென்னையில் அமையவுள்ள மத்திய அரசின் நிறுவனத்திற்கான உரிய திட்ட வரைவுகளைத் தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பிடவும்; தொடர்ந்து சென்னையில் அமையவுள்ள மத்திய அரசு நிறுவனத்தை நிர்வாகம் செய்திடவும் பின்வரும் இரண்டு குழுக்களை அமைக்கலாம் என்ற பரிந்துரை தமிழக அரசினால் மத்திய அரசின் மனித வளத் துறை அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த இரண்டு குழுக்களின் விவரம் வருமாறு :-

<u>தலைவர் :-</u> முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி

<u>துணைத் தலைவர்கள் :-</u>

1. முனைவர் வி.ஐ. சுப்பிரமணியன்
2. முனைவர் வா.செ. குழந்தைசாமி

<u>ஐம்பெருங்குழு :-</u>

1. முனைவர் அவ்வை து. நடராஜன்
2. மணவை திரு. முஸ்தபா
3. கவிஞர் திரு. வைரமுத்து
4. முனைவர் பி.பி. ராஜராஜேஸ்வரி
5. கவிஞர் திருமதி கனிமொழி

**<u>எண்பேராயம் :-</u>**

1. **முனைவர் மா. நன்னன்**
2. **கவிக்கோ திரு. அப்துல் ரகுமான்**
3. **முனைவர் சிலம்பொலி செல்லப்பன்**
4. **கவிஞர் திரு. வாலி**
5. **கவிஞர் திரு. கா. வேழவேந்தன்**
6. **பேராசிரியர் சாலமன் பாப்பையா**
7. **திரு. டி. ரவிக்குமார், எம்.எல்.ஏ.**
8. **பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்**

**தமிழக அரசின் இந்தப் பரிந்துரையை மத்திய மனித வளத் துறை அமைச்சர் ஏற்றுக் கொண்டு அதற்கான ஆணையினை இன்று பிறப்பித்துள்ளார்.**

**செம்மொழியாம் தமிழ் வளர்ச்சிக்கும், இட ஒதுக்கீடு சமூக நீதிக்கும் உறுதியான ஒத்துழைப்பினை தொடர்ந்து நல்கி வரும் மத்திய மனித வளத் துறை அமைச்சர் மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் வரும் 25ஆம் தேதி அன்று கலைவாணர் அரங்கில் மாலை 5 மணி அளவில் தமிழக அரசின் சார்பில் பாராட்டு விழா நடைபெறும். விழாவில் ஆன்றோர்களும், சான்றோர்களும் கலந்து கொண்டு மத்திய அமைச்சருக்கு பாராட்டு தெரிவிப்பர். மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் ஏற்புரையாற்றுவார்.**

****

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9